

ஈரோடு மாவட்டம் கதிரம்பட்டி ஊராட்சி, பெரும்பள்ளம் ஓடை கரையில் ஒரு லட்சம் பனை விதைகள் நடும் பணியினை பனைமர தொழிலாளர் நலவாரிய தலைவர் எர்ணாவூர் எ.நாராயணன் தலைமையில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் சிந்து ரவிச்சந்திரன், ஒன்றிய பெருந்தலைவர் பேரோடு பிரகாஷ், பெருந்துறை பி.சங்கர்குமார், ஈரோடு கே.உமாமகேஸ்வரி, நாமக்கல் சி.பூமணி, சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தி.மு.க இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு "என் உயிரினும் மேலான.. !" என்ற தலைப்பில் நடைபெறும் பேச்சுப்போட்டியில் செங்கல்பட்டு மாவட்டத்தில் இருந்து மாநில அளவிலான இறுதிப் போட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் பேச்சாளர்களான கீர்த்தனா, பார்கவி, சிவரஞ்சனி, ஸ்ரீலேகா, தினேஷ் , அருண், சிலம்பரசன், ரிஷி சந்தோஷ் ஆகியோரை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பாராட்டினார். உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், துணை அமைப்பாளர்கள் தையூர் விஜயகுமார், கமலக்கண்ணன், ஜானகிராமன், மணிகண்டன், ராமமூர்த்தி ஆகியோர் உள்ளனர்.

### ம.கிரகாம்பெல் தலைமை! சுரேஷ் ராஜன் – ஜோசப்ராஜ் – சிவராஜ் முன்னிலை!

# நெல்லை கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் சிறப்புரை!

நெல்லை, அக். 25 -

நெல்லை கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் பாளையங்கோட்டை மகாராஜா நகரில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள் நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி சுரேஷ் ராஜன், (முன்னாள் அமைச்சர்) அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி ஜோசப்ராஜ், இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி சிவராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், சித்திக், மாவட்டப் பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர்கள் கணேஷ்குமார் ஆதித்தன், மாவட்ட துணைச் செயலாளர்கள் நம்பி, மாஞ்சோலை மைக்கேல், தமயந்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ராமச்சந்திரன், கணேசன், சாந்தி சுயம்பு, பரமசிவ ஐயப்பன், அபுபக்கர், எட்வின் வளவன் அரசு, கனகராஜ், ஒன்றியச் செயலாளர்கள் சிவனு பாண்டியன் என்ற பரணி சேகர், முத்து கிருஷ்ணன், ராஜன், போர்வெல் கணேசன், முத்துப்பாண்டி ஆரோக்கிய எட்வின், ஜோசப் பெல்சி, ஜெகதீஸ், சேவியர் ராஜா, நகரச் செயலாளர் கணேசன், சுப்பிரமணியன் என்ற மணி சூரியன், பேரூர்ச் செயலாளர்கள் முத்து கணேசன், இசக்கி பாண்டியன், சுப்பையா, மனிஷா செல்வராஜ், முருகையா பாண்டியன், கசமுத்து, ஜான்கென்னடி, தமிழ்வாணன், டி.வானுமாமலை, எம்.வானுமாமலை, அயூப்கான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு:-

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தலைமைக் கழக வழிகாட்டுதலின்படி நெல்லை கிழக்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியினை தலைமை கழகத்தின் மூலம் சட்டமன்றத் தேர்தல் நியமிக்கப்பட்டுள்ள நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் சுரேஷ் ராஜன், இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் சிவராஜ், அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ஜோசப் ராஜ் ஆகியோர் மேற்பார்வையில் மேற்கொள்ள வேண்டி இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

அதன்படி 01.01.2025 தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட, வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 29.10.24 அன்று வெளியிட உள்ளது.

அதில் பெயர்களை சேர்த்திட, நீக்கிட, திருத்தங்கள் மேற்கொள்ள 29.10.24 முதல் வரும் 28.11.24 வரை மனு செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதனுடைய சிறப்பு முகாம்கள் 9.11.24 சனி 10.11.24 மற்றும் 23.11.24, 24.11.24 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளது.

இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும் இடம் மாறிய வாக்காளர்களும் 01.01.25 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்தந்த பகுதிகளில் ஒப்படைக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் நெல்லை கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் இதுவரை இடம்பெறாத வாக்காளர்களின் பெயர்களையும்,புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும் தொகுதியில் இருந்து இடம்பெயர்ந்து உள்ளவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் உரிய படிவங்களை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் ஒப்படைத்து முழுமையாக பணியினை மேற்கொள்ள வேண்டும்.

இப்பணியினை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அணிகளின் நிர்வாகிகள் ஆகியோர் வாக்காளர் சேர்த்தல், நீக்கல், பணிகளை மேற்கொண்டு அது குறித்த விபரங்களை மாவட்டக் கழகத்திற்கு அவ்வப்போது கடிதம் மூலம் தங்கள் பகுதிகளில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் குறித்த விவரங்களை தகவல் அளித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களுடைய நல்வாழ்த்துக்களோடு நெல்லை மாவட்டப் பொறுப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேருவை மாவட்டச் செயற்குழுக் கூட்டம் பாராட்டி வாழ்த்தி மகிழ்கிறது. அவர் பணி சிறக்க நெல்லை கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் முழு ஒத்துழைப்பு வழங்கி அவருக்கு உறுதுணையாக இருக்க இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

மேலும் இதற்கு முன்பாக பொறுப்பு அமைச்சராக பணியாற்றி தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்ட அனைத்து கழகப் நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற ஆலோசனை வழங்கி வழி நடத்திய நிதி மற்றும் சுற்றுச்சூழல்துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவை இக்கூட்டம் பாராட்டி வாழ்த்தி மகிழ்கிறது.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுடைய நல்வாழ்த்துக்களோடு நெல்லை கிழக்கு மாவட்டத்தில் உள்ள நாங்குநேரி தொகுதி பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள சுரேஷ் ராஜன், இராதாபுரம் தொகுதி பார்வையாளர் சிவராஜ், அம்பாசமுத்திரம் தொகுதி ஜோசப் ராஜ் ஆகியோரை நியமனம் செய்ததற்கு தலைவர் அவர்களுக்கு நன்றியும் அவர்கள் பணி சிறக்க பாராட்டும், நன்றியும் இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

கழகத் தலைவர் கலைஞரின் மனச்சாட்சியாக இருந்து மறைந்த முரசொலி மாறன் அவர்களின் சகோதரர் முரசொலி பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றி இளைஞர் அணியை உருவாக்க கழகத்

ம.சிந்தனைச்செல்வன் தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து சிறப்பாக பணியாற்றி,கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் வழிகாட்டியாக இருந்து பணியாற்றி மறைந்த மரியாதைக்குரிய முரசொலி செல்வம் அவர்களுக்கு இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.


அம்பாசமுத்திரம் நகரச் செயலாளர் நகர்மன்றத் தலைவர் பிரபாகரனின் தாயார் ஜோதிரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) மறைவு, கலைஞர் டி.வி.யின் தலைமை செய்தி ஆசிரியர் திருமாவேலன் தாயார் முத்துலட்சுமி மறைவு, அம்பாசமுத்திரம் ஒன்றியம் அடைய கருங்குளம் கிளைச் செயலாளர் நாராயணத்துரை அவர்கள் மறைவு, மூலைக்கரைப்பட்டி ஒன்றிய பிரதி காளிசரன் தகப்பனார் கிருஷ்ணன் ஆசாரி அவர்கள் மறைவு, விக்கிரமசிங்கபுரம் முன்னாள் மகளிர் அணி நிர்வாகி வசந்தா அவர்களின் மறைவு ஆகியோருக்கு இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி

# 111 அ வட்டம் என்.கோபி நாகலிங்கத்தின் மாமனார் எம்.ஆனந்தன் மறைவு!

## கழக முன்னணியினர் அஞ்சலி!



சென்னை, அக். 25 -

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி 111 அ வட்டப் பொருளாளர் என்.கோபி நாகலிங்கத்தின் மாமனார் எம்.ஆனந்தன் (வயது 74) அவர்கள், நேற்று (24-10-2024 வியாழக்கிழமை) இரவு 8.15 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

செய்தியறிந்தும் கழக முன்னணியினர், தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த எம்.ஆனந்தன் அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் இன்று (25-10-2024 ) மாலை 4.30 மணி அளவில் காளியம்மன் கோவில் 1வது தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன.



தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா சட்டமன்ற தொகுதி நிதியில் இருந்து ரூ. 1,65,000 தில் கே.மகேந்திரன் (எ) மாற்றுத்திறனாளிக்கு இருசக்கர வாகனத்தை அவரது இல்லத்தில் நேற்று வழங்கினார். உடன் மாமன்ற உறுப்பினர்கள் ரமணி ஆதி மூலம் ஜெகன் பகுதி துணைச் செயலாளர் செல்வகுமார், மாநகர ஆதிதிராவிடர் நலக் குழு (து) அமைப்பாளர் மங்களபுரம் பாபு மற்றும் கழகத் தோழர்கள் இருந்தனர்.

### கூடன்குளம் அணுமின் நிலையம் வள்ளியூர் வடலிவிளை

# காற்றாலை நிலையம் கள ஆய்வு - அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம்!

## சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஏ.பி.நந்தகுமார் தலைமையில்!

சென்னை, அக். 25-

நெல்லை மாவட்டம் கூடன்குளம் அணுமின் நிலையம், வள்ளியூர் வடலிவிளை காற்றாலை நிலையம் கள அய்வு மற்றும் அனைத்துதுறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழு (2024 - 2025) தலைவர் ஏ.பி.நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

நெல்லை மாவட்டம், இராதாபுரம் வட்டம், கூடன்குளம் அணுமின் நிலைய வளாகம், வள்ளியூர் வடலிவிளை காற்றாலை, போன்ற இடங்களில் 23.10.2024 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழு (2024-2025) தலைவர் ஏ.பி.நந்தகுமார் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், முதன்மைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன், குழு உறுப்பினர்கள் / சட்டமன்ற உறுப்பினர்கள் க.அசோகன் (சிவகாசி), ஈ.ஆர்.ஈஸ்வரன் (திருச்செங்கோடு), மு.பெ.கிரி (செங்கம்), துரை.சந்திரசேகரன் (திருவையாறு), (காட்டுமன்னார்கோவில்), ஒய்.பிரகாஷ் (ஓசூர்), த.வேலு (மைலாப்பூர்), முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா (பாபநாசம்) மற்றும் திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

நெல்லை மாவட்டம், இராதாபுரம் தாலுகா, கூடங்குளம் மற்றும் விஜயாபதி கிராமங்களில் அமைந்துள்ள தி/ள். இந்திய அணுசக்தி கார்ப்பரேஷன் லிமிடெட்டின் கூடங்குளம் அணுசக்தி திட்டம் 2X1000 மெகாவாட் திறன் கொண்ட அலகு 1 மற்றும் 2 மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டது. இந்த ஆலைக்கு 2000 மெகாவாட் (2X1000 மெகாவாட்), மின்சாரத்தை உற்பத்தி செய்ய நிறுவுதலுக்கான ஒப்புதல் வழங்கப்பட்டு, இயங்கி வருகிறது.

மேலும், இவ்வாலை நாள் ஒன்றுக்கு 5000 கிலோ லிட்டர் கடல்நீரை, நன்னீராக்கும் நான்கு நிலையங்களை அதில் இரண்டு தேவை ஏற்படின் இயக்கும் வகையில் அமைத்துள்ளது. இதிலிருந்து பெறப்பட்ட நீரைக் கொண்டு அணு உலை இயக்கத்தில் வெளியாகும் வெப்பத்தினை ஏற்று ஆவியாக மாறி விசைப்பொறியினை (Turbine) இயக்கி மின்சாரத்தினை தயாரிக்கப் பயன்படுகிறது. இந்நிறுவனத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து சுத்திகரிப்பு செய்யப்பட்டு வருகின்றது.

இந்த ஆலையில் உருவாகும் சாக்கடை, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு பசுமை வளாகம் அமைக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது. வாரியத்தால் தொழிற்சாலையிலிருந்து மாதந்தோறும் கழிவுநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டு வருகிறது.

மேலும், இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவது குறித்து சட்டமன்ற பேரவை பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் அணுமின் திட்ட அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்கள்.

அதனைத்தொடர்ந்து, இராதாபுரம் வட்டம் வள்ளியூர் வடலிவிளை பகுதியில் தமிழ்நாட்டின் மரபுசாரா எரிசக்தி துறையின் பங்களிப்பின் இந்தியாவின் முதல் முறையாக குறைவான காற்று வீசும் இடங்களில் ரூ.32.4 கோடி செலவில் 4.2 மெகாவாட் உற்பத்தி திறன் உள்ள காற்றாலை M/s.WEG Industries Pvt Ltd மூலம் முன்மாதிரியாக 17.10.2022 அன்று வள்ளியூர் வடலிவிளை பகுதியில் நிறுவப்பட்டது. இதன் மூலம் 21.10.2024 வரை 11:13 மில்லியன் யூனிட் மின்சாரம் பெறப்பட்டுள்ளது. காற்றாலை மூலம் பெறப்படும் மின்சாரமானது 33 கி.வோ. தனி மின்பாதை வழியாக வள்ளியூர் 110/3311 கேவி துணைமின் நிலையத்தில் மின்கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், அதிகமான மின்சாரம் கிடைக்கும் பட்சத்தில் இதே போன்று காற்று குறைவாக வீசும் இடங்களில் காற்றாலை நிறுவுவதற்கான நடவடிக்கை மேற்கொள்வது குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.


தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், நேற்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழு (2024-2025) தலைவர் ஏ.பி. நந்தகுமார் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், முதன்மைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன், குழு உறுப்பினர்கள் முன்னிலையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு மீன்வள மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு ஆதிதிராவிர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் செயல்பாடுகள் குறித்தும், தணிக்கைப் பத்திகள் மற்றும் தன்னாய்வு குறித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

பின்னர் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழு (2024-2025) தலைவர் ஏ.பி. நந்தகுமார் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளம் அனுமின் நிலையத்தில் ஆய்வு நடத்தப்பட்டது. கூடன்குளம் அனுமின் நிலையம் எப்படி செயல்படுகிறது என்பது குறித்து அனுமின் நிலைய அலுவலர்கள் தெளிவாக எடுத்துரைத்தார்கள். அனுமின் நிலையம் கட்டுவதற்கு இடம் கொடுத்தவர்களுக்கு கிட்டதட்ட 3000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை அளித்துள்ளார்கள். இது தொடர்பாக தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களும் கோரிக்கை அளித்துள்ளார்கள். அவர்களின் கோரிக்கையினை இந்த சட்டமன்ற குழு உறுதியாக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று இடம் வழங்கியவர்களுக்கு கட்டாயமாக வேலை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். காற்றாலை எப்படி செயல்படுகிறது என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. குறைந்த காற்றில் அதிக மின்சாரம் தயாரிப்பது குறித்து சோதனை முயற்சியில் ஒரு காற்றாலை புதிதாக அமைக்கப்பட்டுள்ளதை ஆய்வு செய்யப்பட்டது. பத்திகளை எப்படி நிறைவு செய்வது என்பது குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

பணிகளை விரைந்து முடிப்பதற்கு அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், இணைச் செயலாளர் திருமதி.பி.தேன்மொழி, மாவட்ட வன அலுவலர் முருகன், மாநகராட்சி ஆணையாளர் மரு.சுகபுத்ரா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.சுகன்யா, சேரன் மகாதேவி சார் ஆட்சியர் அர்பித் ஜெயின், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன், நெல்லை வருவாய் கோட்டாட்சியர் கண்ணா கருப்பையா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.



இந்து அறநிலையத்துறை, ஈரோடு இணை ஆணையர் மண்டல திருக்கோயில்கள் சார்பில் ஈரோடு சைதன்யா பள்ளி வளாகத்தில் 27 இணையர்களுக்கு திருமணம் நடைபெற்றது. நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஏ.ஜி.வெங்கடாசலம் எம்.எல்.ஏ., மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் நவமணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.